**தலைப்பு 432 – கரும்பு, சோளம், மரமுந்திரிகை, மிளகு, கறுவா, கராம்பு, வெற்றிலை உள்ளிட்ட சிறு தோட்ட பயிர்ச்செய்கை அபிவிருத்தி, அவை சார்ந்த தொழில்கள் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

கரும்பு, சோளம், மரமுந்திரிகை, மிளகு, கறுவா, கராம்பு, வெற்றிலை உள்ளிட்ட சிறு தோட்ட பயிர்ச்செய்கை அபிவிருத்தி, அவை சார்ந்த தொழில்கள் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் கரும்பு, சோளம், மரமுந்திரிகை, மிளகு, கறுவா, கராம்பு, வெற்றிலை உள்ளிட்ட சிறு தோட்ட பயிர்ச்செய்கை அபிவிருத்தி, அவை சார்ந்த தொழில்கள் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2021 ஆகஸ்ட் 06 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 செப்தெம்பர் 21 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கரும்பு, சோளம், மரமுந்திரிகை, மிளகு, கறுவா, கராம்பு, வெற்றிலை உள்ளிட்ட சிறு தோட்ட பயிர்ச்செய்கை அபிவிருத்தி, அவை சார்ந்த தொழில்கள் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டுஇராஜாங்க அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும்

வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு அமைச்சின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் / கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

கரும்பு, சோளம், மரமுந்திரிகை, மிளகு, கறுவா, கராம்பு, வெற்றிலை உள்ளிட்ட சிறு தோட்ட பயிர்ச்செய்கை அபிவிருத்தி, அவை சார்ந்த தொழில்கள் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு புதிய அமைச்சாக இருந்தமையால் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவையொன்று காணப்படவில்லை.

## 2. நிதி மீளாய்வு

## 2.1 செலவின முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் 03 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 2,300,000 கூட்டுத்தொகையான நிதி ஏற்பாடுகளில் கூட்டுமொத்தமாக ரூபா 1,652,041 பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | தேவைகள் குறைவாக எழுந்திருந்தமை மற்றும் கொவிட் நிலைமையின் கீழ் செலவினங்கள் குறைவடைந்திருந்தது. | வழங்கப்பட்டுள்ள பிரகாரம் நிதி ஏற்பாடுகளை பயன்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டில் 04 மூலதன செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 4,600,000 கூட்டுத்தொகையான நிதி ஏற்பாடுகளில் ரூபா 2,313,989 தொகை பயன்படுத்தப்படாதிருந்ததுடன், 432-1-2-0-2106 ஆம் இலக்க மூலதன செலவின விடயத்திற்கான ரூபா 500,000 மொத்த நிதி ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது. | அமைச்சு புதிதாக ஆரம்பிக்கப்பட்டிருந்தமையினால் இயந்திர உபகரணங்கள், கட்டிடம், வாகனங்களை மெருகூட்டுவதற்கான செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 2020 ஆம் ஆண்டில் காணப்பட்ட கொவிட் 19 நோய் நிலைமையின் காரணமாக அபிவிருத்தி நடவடிக்கைகளை அமுல்படுத்துவதில் தாமதங்கள் ஏற்பட்டிருந்தமையால் அந்த செலவின விடயங்களில் செலவினம் குறைவடைந்திருந்தது. | மூலதன செலவின விடயத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாட்டை பயன்படுத்துவதற்காக ஆண்டின் ஆரம்பம் முதல் செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிப் பிரமாணம் 1646 இன் பிரகாரம் வாகனத்திற்கு பொறுப்பான உத்தியோகத்தரினால் மாதம் முடிவடைந்த பின்னர் அடுத்து வரும் மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர் 268(அ) பொது மாதிரிப் படிவத்தில் எழுதப்பட்ட மாதாந்த பொழிப்பின் மூல பிரதியுடன் நாளாந்த ஓட்ட அட்டவணை குறித்த திணைக்களத்தின் தலைவரின் ஊடாக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பப்பட வேண்டிய போதிலும், அமைச்சிற்குரிய 14 வாகனங்களின் ஓட்ட அட்டவணைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை | தற்போது காணப்படுகின்ற அல்லது காணப்பட்ட கொவிட் 19 நிலைமையின் கீழ் உத்தியோகத்தர்களை அலுவலத்திற்கு வருவித்துக் கொள்வதற்கு ஏற்பட்டிருந்த வசயீனத்தின் அடிப்படையில் அந்த கடமைகளை நாளதுவரையாக மேற்கொள்ள முடியாதிருந்தமையினால் தற்போது அதற்காக தேவையான நடவடிக்கைககள் திட்டமிடப்பட்டு உரிய தகவல்களை வழங்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | வாகன ஓட்ட அட்டவணை குறித்த பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய 30/2016 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் ஒவ்வொரு 06 மாதங்களுக்கும் ஒரு தடவை வாகனங்களுக்காக எரிபொருள் பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், அமைச்சின் 26 வாகனங்கள் தொடர்பாக அவ்வாறான பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கடந்த காலப்பகுதியில் காணப்பட்ட கொவிட் நோய் நிலைமையின் காரணமாக அதற்காக தேவையான உத்தியோகத்தர்களை வருவித்துக் கொள்வதில் உள்ள வசதியீனத்தின் அடிப்படையில் எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளமுடியாதிருந்தது. எதிர்வரும் நாட்களில் அந்த நடடிவக்கைகளை பூர்த்தி செய்து தகவல்கள் அறிக்கையிடப்படும். | குறித்த காலப்பகுதியில் வாகனங்களுக்கு எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (இ) | நிதிப் பிரமாணம் 891(i) இன் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் தகவல்களை உள்ளடக்கிய பிணைப் பதிவேடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பிணை வைப்பு பதிவேடொன்றை பேணிச்செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என அறியத்தருகின்றோம். | பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பான பிணைப் பதிவேடொன்று பேணிச்செல்லப்பட வேண்டும். |
| (ஈ) | நிதிப் பிரமாணம் 110 இன் பிரகாரம் 2018 ஆகஸ்ட் 17 ஆம் திகதியின் பின்னர் இழப்பு தொடர்பான பதிவேடு நாளதுவரையாக பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. | புதிதாக இராஜாங்க அமைச்சு ஸ்தாபிக்கப்பட்டமையினால் அந்த புத்தகங்கள், ஆவணங்களை நாளதுவரையாக்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணம் 110 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் அதன் கீழ் வருகின்ற மாதிரி படிவத்தின் படி இழப்பு தொடர்பான பதிவேடு பேணிச்செல்லப்பட வேண்டும். |

**2.3 கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்படவேண்டிய உறுதிப்படுத்தல்.**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரினால் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டுக்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்று பேணிச் செல்லப்படுவதை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அந்த முறைமையின் வெற்றித் தன்மை தொடர்பாக முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வினைச் செய்து அதன் பிரகாரம் முறைமையை ஆக்கபூர்வமாக ஆக்குவதற்கு தேவையான மாற்றங்களை செய்யவேண்டியிருந்தமையும், அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டமைக்கான கூற்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | வாரந்தேறும், மாதந்தோறும் செயல்முன்னேற்ற கூட்டங்கள் நடாத்தி அந்தந்த பிரிவுகளின் நிதி மற்றும் பௌதீக செயல் முன்னேற்றம் மீளாய்வு செய்யப்பட்டு சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்குரியதாக திட்டங்கள் திருத்தப்பட்டு உள்ளக முறைமை மற்றும் கட்டுப்பாடுகள் முறைமைப்படுத்தப்பட்டுள்ளது. அதன் போது செயல் முன்னேற்ற மீளாய்வு கூட்டங்களின் அறிக்கை தயாரித்து சகல பிரிவுகளின் உத்தியோகத்தர்களுக்கும் பொறுப்புக்கள் கையளிக்கப்பட்டமையினால் தொடர்ச்சியாக உள்ளக கட்டுப்பாடு மீளாய்வு செய்யப்பட்டள்ளது. அதற்காக தேவையான உறுதிப்படுத்தல்கள் அலுவலகத்தின் கோவைகளில் காணப்படுகின்றமையினால் அதனை கணக்காய்வு நடவடிக்கைகளுக்காக சமர்ப்பிக்க முடியும். | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 அரசாங்க உத்தியோகத்தர்களின் பிணை வைத்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| அமைச்சில், நிதிப்பிரமாணம் 880(i) இல் காண்பிக்கப்பட்டுள்ள தொகுதிகளுக்குரிய உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை இனங்காணப்பட்டு பிணை வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அமைச்சில் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்களிடம் இருந்து பிணைப் பணத்தை அறிவிட்டு பிணை வைப்பு பதிவேடு பேணிச் செல்வதற்கு உரிய நடவடிக்கைகள் விரைவாக மேற்கொள்ளப்படும் என குறிப்பிடுகின்றோம். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் பிணை வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 நட்டம் மற்றும் இழப்பு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மாகாண சபை, உள்ளூராட்சி மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சிலிருந்து 2018 யூன் 13 ஆம் திகதி கிடைக்கப்பெற்ற KC 5500 மோட்டார் வாகனம் 2018 ஆகஸ்ட் 24 ஆம் திகதி விபத்திற்கு உட்பட்டிருந்தது. இந்த வாகனம் அமைச்சிற்கு இது வரை கையளிக்கப்படாதிருந்ததுடன் விபத்தினால் ரூபா 6,783,254 நட்டம் ஒன்று ஏற்பட்டிருந்த போதிலும் அது இதுவரை பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இந்த மோட்டார் வாகனம் காலவதியாகிய காப்புறுதி அனுமதிப்பத்திரத்துடன் ஓட்டத்தில் ஈடுபட்டிருந்தமையினால் ஏற்பட்ட நட்டத்தை காப்புறுதி நிறுவனத்தினாலும் மேவுகை செய்வதற்கு முடியாதிருந்தது. | அந்த விபத்து ஏற்படுகின்ற சந்தர்ப்பத்தில் அதன் காப்புறுதி செல்லுபடியற்றதாக இருந்தமையினால் காப்புறுதி இழப்பீட்டை பெற்றுக்கொள்வதற்கான இயலுமை காணப்படாதிருந்தமையால் உரிய உத்தியோகத்தரிடம் இருந்து அந்த இழப்பீட்டை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நட்டத்ததை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**4. மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை 66 ஆக இருந்ததுடன் அதில் 38 வெற்றிடங்கள் காணப்பட்டன. | அமைச்சு புதிதாக ஆரம்பிக்கப்பட்டமையால் 2020.12.31 இல் பதவியணியினர் வெற்றிடங்கள் காணப்பட்டன. மிகவும் விரைவாக அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என குறிப்பிடுகின்றோம். | தேவையினை கவனத்தில் கொண்டு வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும். |